ராணி
காமிக்ஸ்
நடக்கும்
சிலை
ரூ. 3

ராணி காமிக்ஸ் – 315
(மாதம் இருமுறை இதழ்)

ஆகஸ்டு 1 – 15
1997

நடக்கும் சிலை


நீங்கள் மூவரும் புத்திசாலிகள் என்று நினைத்தேன்! இப்படி ஆட்டம் போடுகிறீர்கள். இதுதான் கடைசி மன்னிப்பு...!
எங்களை மன்னித்துவிடுங்கள் மேடம்!

இனி இதுபோல தவறு செய்தால் பள்ளியைவிட்டே அனுப்பிவிடுவேன். ஜாக்கிரதை!
சரி மேடம்!
இனி எங்கள் மீது எந்தக் குறையும் வராது மேடம்!
வருகிறோம் மேடம்!

வென்டி, மேரி, சாலி மூவரும் உயிர்த்தோழிகள். கெட்டிக்காரிகள். ஆனால் குறும்புக்காரிகள்.
அந்தக் கிழடு நம்மை இப்படி வாங்கு வாங்கென்று திட்டித் தீர்த்து விட்டதே!
வெளியில் சத்தம் கேட்கிறதே? மூட்டை மூட்டையாக இறக்குகிறார்களே?
வென்டி! நமக்கு எதற்கு வம்பு!


அந்த கிழக்குப் பக்க கட்டிடத்தில் என்ன வேலை நடக்கிறது!
தெரிய வில்லையே?


சக மாணவிகள் பலகதை சொன்னார்கள்.
அங்கே கண்காட்சி வைக்கப் போகிறார்கள் என்று கேள்விப்பட்டேன்!
சிலர் நூலகம் என்றார்கள்!
நூலகத்துக்கு யார் செல்லப் போகிறார்கள்?


ஒரு நாள் காலை பள்ளியில் கூட்டம் நடந்தது.
அன்பான மாணவிகளே! நமது பள்ளியின் கிழக்குப் பக்க கட்டிடத்தில் அருங்காட்சியகம் வைக்கப் போகிறோம். அதில் அதிசயத்தக்க வரலாற்று சம்பந் தப்பட்ட மெழுகு பொம்மைகள் வைக்கப்படும்!
வரலாற்று சம்பந்தப்பட்ட சிலைகள் என்றால் எது?
ஒருவேளை பள்ளியின் பழைய தலைமை ஆசிரியைகளின் மெழுகுப் பொம்மையாக இருக்கலாம்!


அதே நேரம்— அருங்காட்சியகத்தில் வேலை மும்முரமாக நடந்து கொண்டிருந்தது.
பல நூற்றாண்டுக்கு முன் வாழ்ந்தவர்களின் சிலைகள் இருக்கிறதே!
மாணவிகள் படங்களை பார்த்து புரிந்துகொள்வதற்கு வசதியாக இந்த ஏற்பாடு!


சில நாள் கழித்து அருங்காட்சியகம் திறந்து வைக்கப்பட்டது.
அட! என்ன அழகான மெழுகுச் சிலைகள். மிகவும் தத்ரூபமாக இருக்கிறதே!
மாணவிகள் மெழுகுச் சிலையைப் பார்த்து அதிசயத்துப் போனார்கள்.


ஆசிரியை கிரேசி மாணவிகளிடம் சொன்னாள்.
ஒவ்வொரு வார இறுதியிலும் பொதுமக்களின் பார்வைக்கு அருங்காட்சியகம் திறந்துவிடப் படும். அன்று உங்களுக்கு அனுமதியில்லை!
அப்படியா?
வெண்டி, மேரி, சாலி மூவரையும் ஆசிரியை கண்டித்தாள்.


மூவரும் வெளியே போங்கள்! அதிகபிரசங்கிகள். உங்கள் மீது எப்பொழுதும் ஒரு கண் வைத்திருக்க வேண்டும்!
ரொம்ப நல்லது மேடம்!
நாங்கள் எங்கள் வழியில் செல்கிறோம்!

அன்று இரவு—வெண்டி தூங்கிக் கொண்டிருந்தாள்.
திடீரென்று சட்டென்று எழுந்தாள்.
சே... கனவு கண்டிருக்கிறேன்! ஆகா நிலா வெளிச்சத்தில் அருங்காட்சியகம் ரம்மியமாக இருக்கிறது!
அருங்காட்சியகத்துக்குள் விளக்கு ஒளி தெரிகிறதே! இந்த நேரத்தில் யாராக இருக்கும்?

வெண்டி எழுந்து சன்னல் அருகே சென்றாள்.
யாரோ நடப்பது போல இருக்கிறது. நடப்பது மெழுகு பொம்மையா? நிச்சயமாக இது கனவு அல்ல!
வெண்டி உடனே தன் தோழிகளை எழுப்பினாள்.
வெண்டி! நீ இன்னும் தூங்கவில்லையா?
உஷ்... சத்தம் போடாமல் இங்கே வாருங்கள்! அருங் காட்சியகத்தை பாருங்கள்!
மூவரும் சன்னல் வழியாக பார்த்தார்கள்.
உள்ளே வெளிச்சம் தெரிகிறது. யாரோ நடப்பது போல இருக்கிறது!
எங்களுக்கு எதுவும் தெரிய வில்லையே?

அருங்காட்சியகத்துக்கு உள்ளே— எவரோ டார்ச்லைட் அடித்து எதையோ தேடிக்கொண்டிருந்தார்கள்.
ஆமாம்! வென்டி சொல்வது சரிதான்! விளக்கு ஒளி தெரிகிறது! யாராக இருக்கும்!
வார்டனிடம் போய சொல்வோமா?
வாருங்கள்! நாம் மூவரும் அருங்காட்சியகத்துக்குள் போய் பார்ப்போம்! முன்பக்க வாசல் வழியாக செல்ல முடியாது. அதனால் மின்சார அறை வழியாக செல்வோம்!
வென்டி மற்ற தோழிகளை அழைத்தாள்.


வெண்டி மின்சார அறைக்கு செல்ல படி ஏறினாள்.
வாசலுக்கு அருகே யாரோ நிற்பது போலத் தெரிகிறதே?

கதவை திறந்தவள் அதிர்ந்து போனாள்.
ஆ... மெழுகு பொம்மை! இந்தப் பெண் பொம்மை எப்படி மின்சார அறைக்கு வந்தது!


வெண்டி பயத்தில் கத்திக்கொண்டே வெளியே வந்தாள்.
வெண்டி! என்னாச்சு? ஏன் இப்படி ஓடி வருகிறாய்?

மின்சார அறைக் கதவுக்கு அருகில் ஒரு பெண் நின்றுகொண்டி ருப்பது போல தெரிந்தது. உள்ளே போய் பார்த்தால் அது மெழுகு பொம்மை!
என்ன பித்தற்றுகிறாய்? டார்ச்சைக் கொடு பார்ப்போம்!
உள்ளே போய் பார்க்கலாம்! வாருங்கள்

அதற்குள் இவர்களுடைய கூச்சலைக் கேட்டு ஆசிரியை ஓடிவந்தாள்.

இதே பொம்மைதான். வாசலுக்கு அருகில் நின்றது!
வெண்டிக்கு என்ன ஆயிற்று!
எதையாவது நினைத்து கற்பனையாகச் சொல்வதே உனக்கு வேலையாகிவிட்டது!

அந்த பொம்மை அருகே சென்று தொட்டுப் பார்த்தார்கள்.
மெழுகு பொம்மைதான்!
இது எப்படி நடக்க முடியும்
நான் சொல்வதை யாரும் நம்பமாட்டீர்கள்?

இன்னும் போனால் இந்த படத்தில் உள்ள பெண்கூட எழுந்து நடந்தால் என்று கதை விடுவாள்! அனைவரும் படுக்கைக்கு செல்லுங்கள்!

நாளைக் காலை முதல் வேலையாக உங்கள் மூவரையும் தலைமை ஆசிரியரிடம் சொல்ல வேண்டும்!
இதைவிட்டால் வேறு என்ன தெரியும்!
இதற்கு ஒன்றும் குறைச்சல் இல்லை!

மறுநாள் காலை— மூவரும் தலைமை ஆசிரியை முன் நிறுத்தப்பட்டார்கள்.
அருங்காட்சியகம் அமைத்தது உங்களுக்கு விளையாட அல்ல! பாடம் படிப்பதற்கு. அனாவசியமாக புரளியை கிளப்பி மற்றவர்களை பயப்பட வைத்த உங்களை வீட்டுக்கே அனுப்பலாம்!
போங்கள்! இங்கே நிற்காதீர்கள்! இனி உங்களை அருங்காட்சியகத்தில் பார்த்தால் விளைவு கடுமையாக இருக்கும்!
வென்டி! அங்கு விளக்கு எரிகிறது. நடமாட்டம் தெரிகிறது என்று ஏங்களை எழுப்பாதே!
உங்களுக்கு உண்மை என்ன என்று புரியவைக்கிறேன்!

மெழுகு பொம்மை நடந்து போனபோது அதன் காலடி ஓசை கேட்டதாக கூறினாயே?
ஆமாம்! ரப்பர் செருப்பு போட்டிருந்தால் எப்படி ஓசை வரும், அதே சத்தம் கேட்டது!
அந்த வார ஞாயிற்றுக்கிழமை பொதுமக்களின் பார்வைக்காக அருங்காட்சியகம் திறந்து வைக்கப்பட்டு இருந்தது. வென்டியும் வந்தாள்.
இன்று என்னை யாரும் தடுக்க முடியாது!

பொதுமக்கள் மெழுகு பொம்மையை மிகவும் ரசித்துப் பார்த்தார்கள்.
நான் இந்த பொம்மையின் காலணியைத்தான் பார்க்க வேண்டும்!
வென்டி, உடனே அந்த பெண் பொம்மையின் காலைப் பார்த்தாள்.
தோல் 'ஷூ' அல்லவா போடப்பட்டிருக்கிறது நடக்கும்பொழுது பிறகு எப்படி சத்தம் வந்தது?
பார்த்தீர்களா? அந்தச சிறுமி எவ்வளவு ஆர்வத்துடன் பொம்மையைப் பார்க்கிறாள்!
மாலையில்— வென்டி, மேரி, சாலி மூவரும் சைக்கிளில் புறப்பட்டார்கள்.
எனக்கென்னவோ அருங்காட்சியகத்தில் ஏதோ மர்மம் நீடிப்பதாக தெரிகிறது!
எப்பொழுதும் அதே நினைப்புதானா?
முதலில் ஏதாவது சாப்பிடுவோம். பிறகு யோசிக்கலாம்!


மூவரும் ஒரு ஓட்டலுக்கு வந்தார்கள்.
முதலில் மெழுகு பொம்மை நடக்காது. அப்படியே நடந்தாலும் நிச்சயமாக அதன் காலடி ஓசை கேட்டிருக்காது!
முதலில் உள்ளே போவோம்!

மூவரும் ஒரு மேசையில் அமர்ந்தார்கள்.
ஏம்பபா! நான் அந்த மெழுகு பொம்மை நடந்ததை என் கண்ணால் பார்த்தேன். அது உண்மை. ஆனால் அது தோல் 'ஷூ' போட்டிருக்கிறது. நடக்கும்போது சத்தம் வராது!
ஒருவேளை தரையில் வழுக்கிக்கொண்டு வந்திருக்கலாம். ஹா... ஹா... ஹா...!


அப்பொழுது ஒருவன் அவர்களிடம் வந்தான்.
பாப்பா! நான் ஒரு எழுத்தாளன். நீங்கள் பேசியதை கேட்டேன். உங்கள் பள்ளியில் வைத்திருக்கும் அருங்காட்சியகத்தைப் பற்றி கேள்விப்பட்டிருக்கிறேன்!
வென்டி! மேடம் சொன்னதை மறந்துவிட்டாயா?

தயவுசெய்து நீங்கள் சாப்பிட்டதுக்கு நானே பணம் கொடுத்து விடுகிறேன்!
இல்லை! நாங்கள் சாப்பிட்டதுக்கு நாங்களே பணம் கொடுத்து விடுகிறோம்!
ஏய்... வாயை மூடு!


ஏய்... அவர் ஏன் நாம் சாப்பிட்டதுக்கு பணம் கொடுக்க வேண்டும்?
நாம் பேசியதை அவரும் கேட்டிருக்கிறார் பார்!
அவர் ஒரு எழுத்தாளர். நம் அருங்காட்சியகத்தைப் பற்றி எழுத நினைத் திருப்பார்!

அருங்காட்சியம் நாளை திறக்கப்படும்!
நான் தினமும் இரவு கண்காணித்துக்கொண்டுதான் இருக்கிறேன். விரைவில் அதன் மர்மத்தை கண்டு பிடிக்காமல் விட மாட்டேன்!

பள்ளியில்—
ஏய்... வென்டி! இந்த நோட்டு புத்தகத்தை ரிக்கார்டு ரூமில். கொண்டு வை!
இந்த மேடத்துக்கு வேறு வேலை கிடையாது!
ரிக்கார்டு அறைக்கு அருகில்தான் அருங்காட்சி யகத்தின் மின்சார அறை இருக்கிறது.
STOCKRO
அதுவும் நல்லதுதான்! நான் உள்ளே செல்வதற்கு இது நல்ல நேரம்!
அப்பொழுது அருங்காட்சியகத் துக்குள்ளே யாரோ நடந்து வரும் காலடி ஓசை கேட்டது.

ஆ... உள்ளே யாரோ நடப்பது போலத் தெரிகிறது!


நான் இப்போது உள்ளே சென்றால் நடமாடுவது யார் என்று தெரிந்து கொள்வேன்!
வெண்டி! எங்கே பதுங்கிச் செல்கிறாள்... நமக்குத் தெரியாமல் தனியாகச் செல்கிறாளே?


ஏய்...! வெண்டி நம்மை விட்டுவிட்டு அருங்காட்சியகத் துக்குள் போகிறாள்! வாருங்கள்!

அப்போதுதான் வெண்டி உள்ளே நுழைய முயன்றாள்.
அங்கே பார்! அவள் உள்ளே நுழையட்டும். கதவை மூடிவிடலாம்!
அதுவும் நல்ல யோசனைதான்!
28


வெண்டி உள்ளே சென்று மெழுகு பொம்மைகளை நோட்டமிட்டாள்.
ஆ... ஆ...! இதே பொம்மைதான்!
இவளிடம்தான் ஏதோ மர்மம் இருக்கிறது!

இவள் நடப்பதை, ஓடுவதை நான் பார்த்தேன். சொன்னால் யாரும் நம்ப மறுக்கிறார்கள்!


வெளியே இருந்த வென்டியின் தோழிகள் கதவை மூடினார்கள்.
ஆ... கதவை பூட்டி விட்டார்களே?
அவளை உள்ளே வைத்து அடைத்து விட்டோம்!


யாரது... கதவை திறங்கள். நான் உள்ளே இருக்கிறேன்!
அங்கே என்ன கலாட்டா? ஏன் இப்படி சத்தம் போடுகிறீர்கள்?
அய்யோ... கிரேசி மேடம் வந்து விட்டார்கள்!


கதவு திறக்கப்பட்டு வெண்டி மாட்டிக்கொண்டாள்.
வெண்டி! உன்னை பலமுறை எச்சரித்தும் நீ இங்கேயே சுற்றுகிறாய்?
மேடம்! நீங்களாவது நான் சொல்வதை நம்புங்கள்!

நடப்பதாகச் சொல்கிறாயே, அந்த மெழுகு பொம்மையை காட்டு!


இந்த பொம்மையைத் தானே சொல்கிறாய்? இதன் காலில் சக்கரமா கட்டிவிடப் பட்டிருக்கிறது.
இல்லை மேடம்! யாரோ இந்த பொம்மைகள் போல உடை அணிந்து பொம் மையோடு பொம்மையாக இருக்கிறார்கள்!

இந்த அறைக்குள் வர ஒரே ஒரு கதவுதான் இருக்கிறது. மற்றபடி யாரும் உள்ளே நுழைய முடியாது!
நான் சொல்வதை நம்ப மறுக்கிறார்களே? அதை எப்படி நிரூபித்துக் காட்டுவேன்?


இன்று மாலை நான் ஒரு சோதனை செய்யப் போகிறேன்! இருவரும் மைதானத்துக்கு வந்துவிடுங்கள்!
எதற்காக?


மாலையில் மூவரும் மைதானத்தில் சந்தித்தார்கள்.
வென்டி எங்களை எதற்காக வரச்சொன்னாய்? என்ன சோதிக்கப் போகிறாய்?
அருங்காட்சியகத்துள் நுழைய மெயின் வாசலைத் தவிர இன்னொரு இரகசிய பாதையும் இருக்கிறது! அதை நான் கண்டுபிடித் திருக்கிறேன்!

வாருங்கள், அந்த இரகசிய பாதையை காட்டு கிறேன்!
வெண்டி! இதுவும் கதைதானே!

இல்லை சாலி! நான் காட்டுகிற பாதையைப் பார்த்து நீயே ஆச்சரியப் படப் போகிறாய்!


இதோ இந்த பழைய அறைதான், அது'
இது பழைய சாமான்கள் போட்டு வைக்கும் தோட்டக்காரனின் அறை ஆயிற்றே... நம்மை பார்த்தால் மேடத்திடம் புகார் செய்திடுவான்!

வெண்டியின் சக மாணவி ஜோன் அவர்களை நோட்டமிட்டாள்.
வெண்டியும் அவள் தோழிகளும் இங்கே என்ன செய்துகொண டிருக்கிறார்கள் ?


வெண்டி அந்த பழைய அறைக்குள் சென்று ஏதாவது வழி தென்படு கிறதா என்று பார்த்தாள்.
சுவரில் இந்த இடத்தில் மட்டும் பலகை மாட்டப் பட்டிருக்கிறதே!

வென்டி சுவரில் இருந்த் பலகையை எடுத்ததும், அங்கே ஒரு பாதை செல்வது தெரிந்தது.
அந்த பாதையில் காலடி எடுத்து வைத்த வென்டி சறுக்கி கீழே விழுந்தாள்.
இடம் தெரியாமல் காலை வைத்ததால் சறுக்கி விழுந்துவிட்டேன்!
அதேநேரம்— வென்டியை நோட்டமிட்ட ஜோன் அநத அறைக்குள் வந்து வென்டியைத் தேடினாள்.
வென்டியை எங்கே காண வில்லை!
அதற்குள் தோட்டக்காரன் அங்கே வந்துவிட்டான்.
ஏய்... பொண்ணு! இங்கே உனக்கு என்ன வேலை?
இல்லை... யாரோ இந்த அறைக்குள் நுழைந்த மாதிரி தெரிந்தது அதான் பார்த்தேன்.
ஏய்... ஜோன் வென்டியை பார்த்து விட்டாள் போலிருக்கிறது!


அப்படி யாரும் இங்கே வரவில்லை! இனி இந்த இடத்துக்கு வரக்கூடாது. புரிந்ததா?

அதேநேரம்— வென்டி அந்த இரகசிய பாதை வழியாக சென்றுகொண் டிருந்தாள்.
நல்லவேளை, கையில் தீப்பெட்டி இருந்தது. அநேகமாக இந்த பாதை அருங்காட்சியகத் துக்குத்தான் செல்லும் என நினைக்கிறேன்!


ஜோன் நடந்ததை மற்ற மாணவிகளிடம் கூறினாள்.
பழைய சாமான்கள் போடும் அறைக்குள் போன வென்டியை தோட்டக்காரன் பார்க்காமல் கதவை பூட்டிவிட்டான்!
அவள் ஏன் அங்கே போனாள்?
அய்யய்யோ...!

இரகசிய பாதையில்—
இத்துடன் இன்னொரு பாதை தொடர்கிறதே!
சுவரில் தடவியபடி நடந்துவந்த வென்டியின் கையில் தாழ்ப்பாள் தட்டுப்பட்டது.
இதிலிருந்து இன்னொரு பாதையா?

அந்தப் பாதை நேராக அருங்காட்சியகத்துக்குள் வந்து முடிந்தது.
நல்லவேளை, இது பார்வையாளர்கள் நேரம் அல்ல! இரகசிய பாதையை பார்த்துவிட்டோம்!


அருங்காட்சியகத்தின் கதவை திறந்து வென்டி வெளியே வந்தாள்.
வென்டி எப்படி அருங்காட்சியகத்துள் போனாள்!
வென்டி! தோட்டக்காரன் உன்னை பார்க்க வில்லையா?
சாலி... கத்தாதே! அங்கே ஜோன் நிற்கிறாள்!


நான் அந்த இரகசிய பாதையை கண்டுபிடித்துவிட்டேன். வெளியில் இருந்து யாரோ மெழுகுச் சிலையைப் போல உடையணிந்து கொண்டு அருங்காட்சியகத்துக்குள் வருகிறார்கள்!
நாம் இப்போது என்ன செய்வது?

மேடம் நம்மை அருங்காட்சியகத்துக்குள் நுழையக்கூடாது என்று கட்டளையிட்டிருக்கிறார்கள். நாம் உண்மையைச் சொன்னாலும் கேட்கமாட்டார்கள்!
அருங்காட்சியகத்துக்குள் நுழைகிறவர்கள் இரகசிய பாதை வழியாகத்தான் நுழைகிறார்கள்! நாம் வெளியே இருந்து அவர்களை கண்காணிப்போம்!

அன்று இரவு—
திரும்பவும் யாரோ அருங்காட்சியகத்துக்குள் நுழைந்திருக்கிறார்கள்!
ஏய்... எழுந்திரு!
அருங்காட்சியகத்துக்குள் ஆள் நடமாட்டம் இருக்கிறது! வாருங்கள் அவர்களை மடக்குவோம்!
அவர்கள் மூவரும் சுறுசுறுப்பானதை ஜோன் பார்த்தாள்.
மூவரும் பேன்ட் அணிந்து எங்கே செல்கிறார்கள்?
படுக்கையில் படுத்திருப்பது போல தலையணையை வைக்கிறார்களே?

அருங்காட்சியகத்துக்கு வெளியே—
உள்ளே நடமாட்டம் இருக்கிறது. சாலி நீ இங்கேயே நில! யாராவது வெளியே வந்தால் அலார மணியை அழுத்து!
நீ எங்கே போகப் போகிறாய்?
நான் வெளியே போய் அந்த இரகசிய பாதையை நோட்டமிடப் போகிறேன்!
நானும் உன்னுடன் வரவேண்டுமா? பயமாக இருக்கிறதே?


வென்டியும், மேரியும் சன்னல் ஏறி குதித்தார்கள். ஜோன் அவர்களை பின்தொடர்ந்தாள்.
நள்ளிரவில் எங்கே போகிறார்கள்?

மேரியும் வென்டியும் இருட்டில் ஓடினார்கள்.
மேரி! சத்தம் போடாமல் ஓடிவா!
யாரும் நம்மை பார்த்து விடக் கூடாது!

இருவரும் இருளில் பதுங்கி பதுங்கி சென்றார்கள்.
ஓகோ! அந்த பழைய சாமான் போட்டு வைத்திருக்கும் அறைக்கு செல்கிறார்கள்!
அங்கே—
ஏய்... இருவர் அங்கே நிற்கிறார்கள். அவர்களில் ஒருவனை ஓட்டலில் சந்தித்தோமே, நினைவிருக்கிறதா?
ஆமாம்! எழுத்தாளர் என்று சொன்னானே?

இருவரும் அந்த இரகசிய பாதை வழியாகத்தான் செல்கிறார்கள்!
ஏய்... சத்தம் போடாமல் என் பின்னே வா!

மேரியும், வென்டியும் வெளிக்கதவை மூடினார்கள்.
உள்ளே இருந்து அவர்கள் வெளியே வரக்கூடாது!
அவர்களை தப்ப விட்டுவிடக் கூடாது!

நாம் இப்போது மின்சார அறை மூலமாக அருங்காட்சியகத்துக்குள் நுழைய வேண்டும்!
அவர்கள் இங்கேதான் வருகிறார்கள்!
ஆ... ஜோன்!
இவள் நம்மை துப்பறிய பின்தொடர்ந்து வந்திருக்கிறாள்! ஓடு...!
இருவரும் மீண்டும் சன்னல் வழியாக உள்ளே சென்றார்கள்.

ஏய்... வந்து விட்டீர்களா?
ஆமாம் சாலி!
நான் அருங்காட்சி யகத்துக்குள் செல்கிறேன்! ஏதாவது ஆபத்து என்றால் குரல் கொடுக்கிறேன்! உடனே அலார மணியை அலறவிடு!
எச்சரிக்கையாகப் போ!
வென்டி மெதுவாக உள்ளே நுழைந்தாள்.
அந்தப் பெண் மற்ற மெழுகு பொம் மைகளின் உடையை சோதிக்கிறாளே, ஏன்?

மற்றவர்கள் வரும் காலடி சத்தம் கேட்டதும், மெழுகுப் பெண் அதிர்ந்தாள்.
ஆ...!
இவர்கள் இருவரைப் பார்த்து இவள் ஏன் பயப்படுகிறாள்!
நீயா?
முட்டாள்... உன்னை என்ன செய்கிறேன் பார்!
அய்யோ... அவன் அந்தப் பெண்ணை தாக்குகிறானே! இடையில் போய் அவர்களை விலக்கவேண்டியதுதான்!

ஏய்... அவளை
விடுங்கடா?
யார் நீ?
இந்தப் பள்ளியில்
படிக்கும் பெண்தான்!

ஏய்... அவளை
விடு!
பொடிக்கழுதை... நீ
முதலில் தூரப்போ....!

சாலி... சாலி... உதவி!
ஏய்... எல்லாரும் ஓடுங்கள்!

உடனே அலாரம் அலறியது. தலைமை ஆசிரியை முதற்கொண்டு அனைவரும் எழுந்துவந்துவிட்டார்கள்.
மேடம்! அருங்காட்சியகத்துக்குள் கொள்ளையர்கள் புகுந்துவிட்டார்கள்!
மேடம்! இவளுக்கு இதே வேலையாகிப் போச்சு!


வெளியே இருந்த ஜோனுக்கு எதுவும் புரியவில்லை!
உள்ளே ஒரே கூச்சலாக இருக்கிறதே! என்ன நடக்கிறது!
அதோ... அங்கே யாரோ நிற்கிறார்கள்!

அதே நேரம்—
வாருங்கள்... தப்பிவிடலாம்!
என்னை விட்டுவிட்டுப் போங்கள்!
ஏய்... உன்னை பிறகு கவனித்துக்கொள்ளுகிறேன்!

பழைய சாமான் போடப்பட்டிருந்த அறை வாசலை கொள்ளையர்கள் தட்டினார்கள்.
இவர்களை தப்பிவிடக்கூடாது என்றுதான் வென்டி கதவை அடைத்திருக்கிறாள்! நானும் இவர்களை தப்பவிடமாட்டேன்!
தட்! தட்!

உடனே ஜோன் இரும்பு உருளையை உருட்டி வந்து கதவை திறக்க முடியாதபடி செய்தாள்.
இனி அவர்கள் வெளியே வர முடியாது!

வெண்டி! அவர்களை எங்கே?
இரண்டு ஆண்களும் ஒரு பெண் மூவருமாக இந்த இரகசியப் பாதை வழியாக சென்றதை நான் பார்த்தேன்!

அவர்களுடன் இங்கே இருந்த மெழுகுச் சிலை பெண்ணும் சென்றுவிட்டாள்.
இப்போது அந்த மெழுகுச்சிலை இருக்கிறதா என்று பாருங்கள்!

மேடம்! இந்த இரகசியப்பாதை வழியாக தப்பிவிடாதபடி அந்த வாசலையும் அடைத்து விட்டோம்!
ஆமாம்! உடனே போலீசுக்கு போன் செய்!
நாம் வெளியே செல்ல முடிய வில்லை!
அவர்கள் நம்மை விரட்டி வருகிறார்கள்!
ஆ...
இதோ... அவள்தான்! அந்த மெழுகுச்சிலை போல நடித்தாள்!
தப்பவிடக் கூடாது!
முகத்தைப் பார்த்தால் மெழுகு போல இருக்கிறதே?

இதோ பார்! அவள் மெழுகு பொம்மை போல முகமூடி அணிந்திருக்கிறாள்!
சரியான கள்ளிதான்!
போலீஸ் இப்பொழுது வந்துவிடும்!

ஏய்... விலகிச் செல்லுங்கள். அருகில் வந்தால் தொலைத்துவிடுவேன்!


அவன் மிரட்டவும், வென்டி பட்டென்று அவன் கையில் ஒரு போடு போட்டாள்.
என்னடா மிரட்டுகிறாயா?
ஆ...! அம்மா!

இனி நீ ஏதாவது அசம்பாவிதம் செய்ய நினைத்தால் மாணவிகள் உன்னை அடித்தே கொன்றுவிடுவார்கள்!
மேடம்! அவர்களை எங்களிடம் ஒப்படையுங்கள்!
ஆமாம் மேடம்!

அதற்குள் போலீசு வந்தது.
ஜோன்! நீ ஏன் வெளியே நிற்கிறாய்?
அந்த அறை வாசலை இரும்பு உருளைகொண்டு அடைத்து வைத்தேன். அதையும் மீறி அவர்கள் தப்பிவிடக் கூடாதல்லவா?

துப்பறிவாளர்கள் அருங்காட்சியகத்தை சல்லடை சல்லடையாக துருவிப் பார்த்தார்கள்.
இந்த பெண் மற்ற மெழுகுச் சிலைகளின் உடையை சோதனை செய்ததாக சொல்கிறாயே எப்படி?
ஆமாம்! தங்கத்தினால் ஆன உடையை தேடுகிறாள் என்று நினைத்தேன்.

அப்படித்தான் நானும் நினைக்கிறேன்! உண்மையிலேயே உங்கள் மாணவிகள் கெட்டிக்காரிகள்!
ரொம்ப நன்றி சார்!
நீங்கள் மூவரும் ஏதோ பித்துபிடித்து உளர்கிறீர்கள் என்று நினைத்தேன். பரவாயில்லை! நீங்கள் பலே கில்லாடி கள்தான்!
தலைமை ஆசிரியை அவர்கள் மூவரையும் பாராட்டினார்.
மெழுகு பொம்மை செய்கிற இடத்தில் உள்ள ஒருவன் தான் திருடிய தங்கத்தை ஏதோ ஒரு பொம்மையில் மறைத்துவிட்டான். அதற்குள் அவனை கைதுசெய்துவிடவே, அந்த பொம்மை உங்கள் பள்ளிக்கு வந்துவிட்டது!
அப்படியானால் அந்தப் பெண் எதற்கு பொம்மை போல நடிக்க வேண்டும்!

இவள் ஏற்கனவே உங்கள் பள்ளியில் வேலை பார்த்தவள்தான் இவள் கொள்ளையர்களுக்கு இரகசியப் . பாதையை காட்டியிருக்கிறாள்!
கொள்ளையர்கள் இருவரையும் போலீசார் கைது செய்துவிட்டனர்.
உங்கள் செயலால் ஒரு பெரிய கொள்ளைக்கூட்டமே பிடிபட்டுவிட்டது. உங்களுக்கு அரசாங்க விருதுக்கு ஏற்பாடு செய்கிறேன்!
வெண்டி! அந்த விருது உனக்குத்தான் கிடைக்க வேண்டும்!
நான் இதை எதிர்பார்க்க வில்லை!
(முடிந்தது)

RANI COMICS (TAMIL FORTNIGHTLY) Licenced to Post WPP Licence No. TN/MS/(N)134. Regd. No. TN/MS (N)/461 Regd. as Newspaper in India No. 42576/84 ISSN 0971-8567

PARLE

என்றும் மறவோம்... வாழ்நாள் வரை

வாழ்க்கைப் பாதை இதுவே சரி

வாழ்க்கைப் பாதையில் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் ஒரு சோதனையே. எந்தப் பாதையில் செல்வது, எதைத் தவிர்ப்பது: நம்மை வேறுபடுத்தும் அடையாளம் இதுவன்றோ. ஒருவித சுயநலமின்றி, எதிர்பார்ப்பின்றி, பிறருக்கு உதவுதல்; பாதையில் செல்கையில் மற்றவர்களின் துயர் நீக்குதல். உண்மையான வாழ்க்கை என்பது இதுதானே. என்றும் மறவோம்... வாழ்நாள் வரை. வாழ்க்கைப் பாதை இதுவே சரி. வருடக்கணக்காக இந்தியாவின் அனைத்திலும் அதிகமாக விற்பனையாகும் பிஸ்கட்.

சுவை மிகுந்தது, உண்மையான சக்தி நிறைந்தது

everest/95/PPL/109 tm